# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூலை- 2017
## Term Examination, July- 2017

| தரம் :- 12 (2018) | நாடகமும் அரங்கியலும் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

1. "நாடக பாடத்தில் தரப்பட்டுள்ள ஒரு பாத்திரத்தைப் பயன்படுத்தி அதிலுள்ள நடிகர்களால் அளிக்கைவெளி ஒன்றில் வகிபாகம் ஒன்றினை மீளுருவாக்கம் செய்யும் செயன் முறையே சித்தரிப்பு ஆகும்" இக் கூற்றை முன்வைத்தவர் யார்
   1) பேட்டோல் பிறெக்ட் 2) கணேசன் மேகநாதன் 3) மு.ராமசாமி
   4) ஸ்ரீராம தேசிகர் 5) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி ( )

2. பரதர் கூறும் பிரதான கதைப்பின்னல் ஐந்தும் முறையே
   1) ஆரம்பம், முயற்சி, பலாகம, பிராய்தியாய, நியதாப்தி
   2) ஆரம்பம், முயற்சி, பிராய்தியாய, நியதாப்தி, பலாகம
   3) ஆரம்பம், முயற்சி, நியதாப்தி, பலாகம, பிராய்தியாய
   4) ஆரம்பம், முயற்சி, பலாகம, நியதாப்தி, பிராய்தியாய
   5) ஆரம்பம், முயற்சி, பிராய்தியாய, பலாகம, நியதாப்தி ( )

3. மிகப்பழைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஒப்பனைப்பொருள்
   1) பான் கேக் 2) கஸ்தூரி மஞ்சள் 3) களிம்பு
   4) பங்பவுடர் 5) அரிதாரம் ( )

4. நடிப்புக்குரிய முறைமைக் கோட்பாட்டினை முன்வைத்தனர்
   1) மேயர் ஹோல்ட் 2) ஸ்ரனிஸ்லவஸ்கி 3) பிரக்ட்
   4) யூஜின் அயனெஸ்கோ 5) அகஸ்தாபோல் ( )

5. விவாகப் பேச்சு (The proposal) எனும் நாடகத்தின் மூலநாடகாசிரியர்
   1) இப்சன் 2) செக்கொவ் 3) ஷேக்ஸ்பியர்
   4) பிறெச்ட் 5) மேயர் ஹோல்ட் ( )

6. 'நாடகம்' நாடக வடிவத்தின் ஆற்றுகை செய்யப்படும் கதையினை நகர்த்திச் செல்பவர்
   1) பெத்தேகுரு 2) புலசந்தோர் 3) கட்டியகாரம்
   4) வெசமுனி 5) கூத்துரைஞன் ( )

7. குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுத் தலைவர்
   1) சிங்கன் 2) வசந்தவல்லி 3) சிங்கி
   4) குற்றாலீஸ்வரர் 5) திரிகூடஇராசப்பகவிராயர் ( )

8. நாட்டிய சாஸ்திரம் கூறும் சாத்வீக அபிநயத்தில் "பிராய" என்பது
   1) வியர்த்தல் 2) மயக்கம் 3) குரல்மாற்றம்
   4) கண்ணீர்சொரிதல் 5) மயிர்கூச்செறிதல் ( )

9. லோகதர்மி எனப்படுவது
   1) குறியீட்டுப் பண்பு 2) பெருங்காட்சிப் பண்பு 3) அசாதாரண அலங்காரம்
   4) மிகை நடிப்பு 5) இயல்பான சித்தரிப்பு ( )

10. நாடகம் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும். பழக்கவழக்கங்களைக் காட்டும் நிலைக்கண்ணாடியாகும். எனும் கருத்து கூறியவர்
1) பரத முனிவர் 2) அரிஸ்ரோட்டில் 3) அலடைஸ்நிக்கொல்
4) பேர்ணாட்ஷா 5) அபிநவகுப்தர் ( )

11. "அலங்கார ரூபன்" எந்த வகை சார்ந்த கூத்து
1) வாசாப்பு 2) வடபாங்கு 3) தென்பாங்கு 4) வடமோடி 5) தென்மோடி ( )

12. அரங்க ஒளி சார்ந்த முக்கியத்துவம் குறைந்த கூற்று
1) வேட உடை ஒப்பனையினை அழுத்தமாகும்
2) அரங்கில் அதுவும் பேசும்
3) காட்சி அமைப்புடன் ஒத்திசைவாகும்
4) மேடை வெளியைத் தெளிவாக்கும்
5) அரங்க இசைக்கேற்றவாறு இருக்கும் ( )

13. குழந்தைவரம், சுகப்பிரசவம் வேண்டி செய்யப்படும் சிங்களச்சடங்கு
1) தொவில் 2) மகாபிரித் 3) கொககாம்பசங்காரிய
4) தகட்டசன்னிய 5) றட்டயக்கும ( )

14. அன்ரிக்கனி நாடகத்தில் இல்லாத பாத்திரம்
1) கிரயோன் 2) தெஸ்ரீசியஸ் 3) இயூரிடிசி 4) ஜெகஸ்ரா 5) இசுமனி ( )

15. சகுந்தல நாடகத்தில் வரும் மாதவையன் எனும் பாத்திரம்
1) முனி குமாரன் 2) சேவகன் 3) செம்படவன்
4) நாயகனின் தோழன் 5) போர்வீரன் ( )

16. அபசுரம் நாடகத்தில் பங்கு பற்றாத பாத்திரம்
1) அருளர் 2) தியாகர் 3) மெய்யர் 4) பொதுவர் 5) சிவாயர் ( )

17. மரத்திலான பொம்மைகளைக் கொண்டு செய்யப்படும் கத்தோலிக்க சமயச் சடங்கு வடிவம்
1) கோலம் 2) உடக்குபாஸ் 3) திருப்பாடுகளின் காட்சி
4) சூரன்போர் 5) யமசங்காரம் ( )

18. "தானயம்பல" எனுமிடத்தில் வேடமும் அணியப்பட்டு செய்யப்படும் சிங்கள நாட்டார் நாடகம்
1) தொவில் 2) மகாபிரித் 3) சொக்கரி 4) றட்டயகும 5) கோலம் ( )

19. நாடகமொன்றின் இசையின் பயன்பாடு எனக் கருத முடியாதது
1) அது நாடகத்தின் பின்னணியைக் காட்டும்
2) அது நாடகத்தின் உணர்வு நிலையைக் காட்டும்
3) அது நாடகத்தின் சூழல் அமைவினைக் காட்டும்
4) அது நாடகத்தின் பாத்திரக் கவர்ச்சியைக் காட்டும்
5) நாடகத்தின் கால, நேரம் என்பவற்றைக் காட்டும் ( )

20. யாழ்ப்பாணத்துப் பேச்சு மொழியை நாடகத்தில் முதலில் கையாண்டவர்
1) கா.சிவத்தம்பி 2) க.சிதம்பரநாதன் 3) சு.வித்தியானந்தன்
4) க.கணபதிப்பிள்ளை 5) க.சொர்ணலிங்கம் ( )

21. சமஸ்கிருத நாடகத்தில் பரதர் பாத்திரங்களை எத்தனைவகையாகப் பாகுபடுத்தினார்
1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று 4) நான்கு 5) ஐந்து ( )

22. நாடகத்தில் ஒரு காட்சியில் நடிகர் பேசும் போது அரங்கிலுள்ள மற்றைய நடிகர்
   1) குறுக்கிடாதிக்க வேண்டும்
   2) யோசணையில் ஆழ்ந்திருத்தல் வேண்டும்
   3) பார்வையாளரை அவதானித்தல் வேண்டும்
   4) வேண்டிய பதிற்குறியைக் காட்ட வேண்டும்
   5) நெறியாளரை நோக்க வேண்டும் ( )

23. அன்ரிக்கனி நாடகத்தை 'கர்வ பங்கம்' எனும் பெயரில் மொழி பெயர்த்தவர்
   1) நா.சுந்தரலிங்கம் 2) ம. சண்முகலிங்கம் 3) இ.முருகையன்
   4) மஹாகவி 5) கதிரேசபிள்ளை ( )

24. நாடகம் ஒன்றில் குரல், பாடல், சொல்லாடல் மூலம் கருத்தைப் புலப்படுத்துவது
   1) ஆங்கிகம் 2) சாத்விகம் 3) வாச்சிகம்
   4) ஆஹார்யம் 5) ஸ்தாயிபாவம் ( )

25. அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் அரங்க மும்மைகளாவன
   1) காலம், இடம், இயக்கம் 2) காலம், வெளி, நடிப்பு 3) நடிப்பு, காட்சி, இசை
   4) காலம், இயக்கம், பாத்திரம் 5) வெளி, ஒளி, அசைவு ( )

26. உலக அரங்கின் தொட்டில் என அழைக்கப்படும் அரங்க மரபு
   1) இத்தாலிய அரங்கு 2) உரோம அரங்கு 3) சீன அரங்கு
   4) இங்கிலாந்து அரங்கு 5) கிரேக்க அரங்கு ( )

The National e-learning Portal for The General Education

27. நடிகரின் பேச்சுத்திறனை வளர்க்க உதவும் பயிற்சி
   1) குரல் பயிற்சி 2) உடல் தளர்வுப் பயிற்சி 3) அசைவுப் பயிற்சி
   4) அவதானப் பயிற்சி 5) கிரகித்தல் பயிற்சி ( )

28. அரங்க வெளியானது
   1) உயர்த்தப்பட்டிருக்க வேண்டும்
   2) பலதளங்கள் கொண்டிருக்க வேண்டும்.
   3) வட்ட வடிவமாக இருக்க வேண்டும்
   4) காட்சித்திரைகள் கொண்டிருக்க வேண்டும்
   5) பார்ப்போர் பார்க்கக் கூடியவாறு இருக்க வேண்டும் ( )

29. நடிகனை வழி நடத்துபவர்
   1) இசையமைப்பாளர் 2) ஒளிவிதானிப்பாளர் 3) நெறியாளர்
   4) காட்சி விதானிப்பாளர் 5) வேட உடை ஒப்பனையாளர் ( )

30. கிரேக்க அவலச்சுவையினால் வெளிக்கொணரப்படும் உணர்ச்சிகள்
   1) பயமும், கழிவிரக்கமும் 2) பயமும், அச்சமும் 3) பரிவும், பாவமும்
   4) சாந்தம், கோபம் 5) பரிவும், இரக்கமும் ( )

31. பாடுதல் முக்கியம் பெறும் அரங்க வடிவம்
1) ஒப்பேறா 2) பலே 3) ஒடிசி 4) கதக் 5) கபுகி ( )

32. நாடகம் என்பது சூழமைவுகளைப் போலச் செய்வதாகும் எனும் கருத்து
1) காளிதாஸரது 2) அரிஸ்ரோட்டிலினது 3) தொம்சனினது
4) ஷேக் ஸ்பியரினது 5) பிக்காட்கேம்பிரிஜ்சினது ( )

33. புதிதளித்தலுக்கு மிக அவசியமானது
1) ஆர்வம் 2) குரல் 3) முகபாவம் 4) தன்னிறைவு 5) கற்பனை ( )

34. நாடக தயாரிப்பாளனின் பணிகளுள் அடங்காதது
1) எழுத்துரு தெரிவு 2) நெறியாளரின் தெரிவு 3) நாடகத்தை பழக்குதல்
4) நடிகர்களை வழங்குதல் 5) நிதி வழங்குதல் ( )

35. அபசுரம் நாடகத்தில் வரும் சிவாயர் எனும் பாத்திரம்
1) நாத்தீகன் 2) மதவாதி 3) பித்தலாட்டக்காரன்
4) படித்தவர் 5) ஊரை ஏமாற்றுபவர் ( )


அ


ஆ


இ


ஈ


உ

The National e-learning Portal for The General Education

36. படம் (அ) இல் காணப்படும் அரங்கவெளி
1) கரலிய 2) தானாயம்பல 3) களத்துமேடு
4) பொட்டல்வெளி 5) வட்டக்களரி ( )

37. படம் (ஆ) இல் காணப்படுபவர்
1) சோபோக்லீஸ் 2) மெனான்டர் 3) யூரிப்பிடிஸ்
4) அரிஸ்ரோட்டில் 5) அரிஸ்ரோப்பன்ஸ் ( )

38. படம் (இ) இல் காணப்படும் நோயைக் குறிக்கும் வேடமுகம்
1) அமுக்குசன்னி 2) ஊமைச்சன்னி 3) மூடச்சன்னி
4) விசர்ச்சன்னி 5) செவிட்டுச்சன்னி ( )

39. படம் (ஈ) இல் காணப்படும் சடங்கரங்கு
1) சூரன்போர் 2) உடக்குப்பாஸ்க் 3) ரட்டயக்கும
4) சன்னியக்கும 5) சொக்கரி ( )

40. படம் (உ) இல் உள்ள அரங்கவியலாளர்
1) சுகதபாலடிசில்வா 2) தர்மசிறிபண்டாரநாயக்க 3) சுந்தரலிங்கம்
4) பராக்கிரமநிரியெல்ல 5) சார்ஸ்டயஸ் ( )

## பகுதி - II

❖ **பகுதி II இல் பிரிவு A யிலிருந்து இரண்டு வினாக்களும் பிரிவு B யிலிருந்து இரண்டு வினாக்களுமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

### பிரிவு - A

*01.*

1) நாடகத் தோற்றம் பற்றிய மூவரின் கருத்துக்கள் 3 தருக? (3 புள்ளிகள்)
2) நாடகத்தின் சிறப்பியல்புகள் 5 குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3) சடங்கிலிருந்து நாடகம் வரையான வளர்ச்சிப் படிநிலை ரீதியாக கூறி உதாரணம் தந்து விளக்குக. (8 புள்ளிகள்)

*02.*

1) பரதர் கூறும் நிருத்த நிருத்திய நாட்டிய நிலைகளை விளக்குக. (5 புள்ளிகள்)
2) நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படும் இருவகை தர்மிகளைக் கூறிவிளக்குக. (5 புள்ளிகள்)
3) இந்திய அரங்கில் பேசப்படும் மார்க்க தேசிய வகைகளுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக. (5 புள்ளிகள்)

*03.*

1) அன்ரிக்கனி நாடக ஆசிரியர் பெயர் என்ன. (2 புள்ளிகள்)
2) அரிஸ்ரோட்டில் கூறும் நாடக ஆக்கக் கூறுகள் எவை? (3 புள்ளிகள்)
3) அன்ரிக்கனி நாடகத்தில் காணப்படும் பாத்திரங்களைப் பட்டியற்படுத்துக. (5 புள்ளிகள்)
4) அவற்றுள் முக்கிய இரண்டின் பாத்திரப் பண்பைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

### பிரிவு - B

*04.*

1) நால் வகை அபிநயங்களும் எவை? (2 புள்ளிகள்)
2) அவை ஒவ்வொன்றையும் பற்றி விளக்குக (6 புள்ளிகள்)
3) நாடகத்தில் அபிநயம் ஒவ்வொன்றினதும் பயன்பாடு எவ்வாறு அமைந்திருக்கும் என விளக்குக. (7 புள்ளிகள்)

*05.* பின்வரும் சடங்குகள் பற்றி சுருக்கி விளக்குக.

1) பாண்டவர் வனவாசம்
2) உடக்குப் பாஸ்
3) சொக்கரி (3X5 புள்ளிகள்)

*06.* பின்வருவனவற்றில் ஏதாவது மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) பலே 2) நூர்தி 3) நடன நாடகம் 4) ஒப்பேறோ 5) நாடகம

(3X5 புள்ளிகள்)